# பாதிக்கப்பட்டோருக்கான உதவிகள் சட்ட விதிமுறைகள் (OHG)

இந்தத் தகவல்கொத்து கணவனால் அல்லது கூடி வாழ்கின்ற காதலனால் (Partner) உடல் ரீதியாக அல்லது உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட பெண்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குகின்றது.

## பொதுவான விதிகள்

- பாதிக்பட்ட பெண்ணாகிய நீங்கள் உங்களுக்குரிய ஆலோசனை நிறுவனத்தை நீங்கள் சுயமாகத் தேர்ந்தெடுக்க முடியும். ஆனால் இந்த ஆலோசனை நிறுவனம் உங்கள் மாநிலத்தால் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். இவ்வாலோசனை நிறுவனங்களின் சேவைகள் யாவும் இலவசமானவை. இவ்வாலோசனை நிறுவனங்களிலிருந்து சட்டரீதியான; சமூகரிதியான மற்றும் உள ரீதியான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு உரிமை இருக்கின்றது.
- பாதிக்ப்பட்டதினத்திலிருந்து 2 வருடங்களுக்குள் நீங்கள் பாதிக்கப்பட்டோருக்கான உதவித்தொகையினைக் கோரி விண்ணப்பிக்க முடியும். ஆனால் இதற்கென சில விஷேடமான விதிமுறைகள் உள்ளன.
- பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளுக்கும் குற்றப்பத்திரிகைக்கும் (Strafanzeige) எந்தவிதமான தொடர்புகளும் இல்லை

உங்களைத் துன்புறுத்தியவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தால் பின்வரும் முக்கியமான விடயங்களை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

- போலீஸ் அல்லது நீதிபதி விசாரணையின்போது நீங்கள் உங்களுடன் ஓர் நபரை அழைத்துச் செல்ல முடியும்.
- நீதிபதியின் முக்கியமான விசாரணை முடிவுகள் பற்றி அறிந்து கொள்ளமுடியும். உதாரணமாக குற்றவாளி ஜெயிலிலிருந்து விடுவிக்கப்பட்டாரா போன்ற விடயங்களை நீங்கள் அறிந்துகொள்ளலாம்.
- குற்றவாளியின் முன்னிலையில் இல்லாமல் பிரத்தியேகமாக உங்களுக்குரிய விசாரணையை நடாத்தும்படி நீங்கள் கூறமுடியும்.
- வழக்கின் சாட்சியாக நீங்கள் அழைக்கப்பட்டால் விசாரணையின்போது உங்கள் பாலுறுப்புக்கள் சம்பந்தமாக கேள்விகள் கேட்கப்பட்டால் அதற்குரிய பதிலை நீங்கள் சொல்லாமல் இருக்க உங்களுக்கு உரிமையுண்டு.

நீங்கள் பாலியல் ரீதியான தாக்கத்திற்குள்ளாகியிருந்தால் பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ளவும்.

- உங்களைப் பெண்போலீஸ் அதிகாரியும் பெண்அரசாங்க வக்கீலும்தான் விசாரிக்கவேண்டும் என்று நீங்கள் விண்ணப்பிக்கலாம்.
- நீதிமன்றத்தில் நீங்கள் பங்குகொள்ளவிருக்கும் விசாரணையின்போது குற்றவாளி கலந்துகொள்ளாமல் இருக்கவேண்டுமென நீங்கள் விண்ணப்பிக்கலாம்.
- நீதிமன்ற விசாரணை சம்பந்தமான விடயங்கள் ஏனையோருக்குத் (பொதுமக்களுக்கு) தெரியாமலிருக்கும்படி இரகசியமான முறையில் நடாத்தும்படி கேட்கமுடியும்.
- நீதிமன்ற விசாரணையில் ஓர் பெண்அதிகாரி சமூகமளித்திருக்க வேண்டும் என நீங்கள் கேட்க அனுமதியுண்டு.